Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.176/2024

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | காவல் ஆய்வாளர் |
| பெயர். | - | எழிலரசி | வட்டம் | - | கள்ளக்குறிச்சி |
| க /பெ. | | ராஜேஷ் | சமயம் | - | |
| கிராமம் | - | கள்ளக்குறிச்சி | வயது | - | 45 |

14.07.2025

1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சி மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2015 ம் நான் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையைத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது என்னுடன் பணிசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் 20.12.2015 ந் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்ற அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஆமூர் காலனியை சேர்ந்த வீரபத்திரன் மகன் பிரகாஷ் என்பரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அதிகாலை 04.30 மணியளவில் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.895/2015 ச/பி. 294(பி), 341, 323, 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ.4 ஆகும்.**

3. மேற்படி வழக்கை எனது பார்வைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே காலை 06.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமசாமி மற்றும் சிவநேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தாயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அசாஆ.5,6 ஆகும்.**

4. பின்பு சாட்சிகள் பிரகாஷ், வீரபத்திரன், டேவிட், ராமசாமி, சிவநேசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளை தேடிச்சென்றதில் எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் மூலம் முன் பிணை சென்றுள்ளதாக தெரியவந்ததால் அவர்களை கைது செய்ய முடியவில்லை.

5. பின்னர் காயம்பட்ட அ.சா.1 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தமிழ்மணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். அதில் மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்துரை வழங்கியுள்ளார். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை ச/பி. 294(பி), 341, 323, 506(2) இதச என்பதை ச/பி. 294(பி), 341, 323, 324 இதச ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி. 294(பி), 341, 323, 324 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.